**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2018**

**D051 தமிழகக் கலைகள்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எதன் வெளிப்பாடு கவின்கலை எனப்படும்?
2. நொண்டி நாடகம் எக்காலத்தில் தோற்றம் கண்டது?
3. அங்கத நாடகத்தின் நோக்கம் என்ன?
4. கொடுகொட்டி என்னும் ஆடல் எந்தத் தெய்வத்திற்குரியது?
5. தேவார மூவர் பெயர்களை எழுதுக.
6. ஓதுவார் என்பவர் யாவர்?
7. பொய்க்கால் குதிரை ஆட்டத்தைச் சிலப்பதிகாரம் எப்படிக் குறிப்பிடுகிறது?
8. சிலப்பதிகாரம் காட்டும் அரங்கின் திரைகள் இரண்டினைக் கூறுக.
9. நாட்டுப்புறக் கலையின் ஆட்டத்தின் பெயர்கள் இரண்டினைக் கூறுக.
10. காவடிச்சிந்து பாடிய முதல் பாவலர் யார்?
11. தமிழக அரசின் அரசவைக் கலைஞராகத் திகழ்ந்தவர் இருவரின் பெயரைக் குறிப்பிடுக.
12. குகப் புகழ் பாடல்களைப் பாடியவர் யார்?
13. அய்யனார்–குதிரைச் சிற்பங்களின் அமைவிடங்கள் யாவை?
14. எருது என்னும் கோட்டோவியம் படைத்தவர் யார்?
15. நவீன ஓவியர்கள் இருவர் பெயர் கூறுக.

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. பரத நாட்டியம் சிறு குறிப்பு வரைக.
2. சமூக நாடகம் பற்றி விளக்குக.
3. இருபதாம் நூற்றாண்டுக் கீர்த்தனையாளர் யாவர்?
4. பல்லவர் காலச் செப்புத் திருமேனி குறித்து விளக்குக.
5. இலக்கியத்தில் மரச் சிற்பங்கள் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
6. மயிலாட்டம் பற்றி நீவீர் அறிவன யாவை?
7. சிலப்பதிகாரம் காட்டும் அரங்கின் அமைப்பினை விளக்குக.
8. நாடகக் கலைஞர்கள் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டனர்?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) ஐந்திணைகளும் குடியிருப்புகளும் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) தற்கால நாடக வளர்ச்சி குறித்து விவரிக்க.

2. (அ) கரகாட்டம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) நகர அமைப்பும், அதன் வகைகளும் குறித்து விவரிக்க.

3. (அ) பாறை ஓவியங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) திருஞான சம்பந்தரின் தேவாரப் பண் குறித்து ஒரு கட்டுரை வரைக.

❋ ❋ ❋